தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 307/மா/2023
நாள் 13.09.2024

திரு எஸ். சங்கரநாராயணன் — முறையீட்டு மனுதாரர்
திருவாளர்கள் சீனிவாச வேஸ்ட் மேனேஜ்மேண்ட் பிரைவேட் லிட்
சென்னை 83

ஆணையர் — எதிர் மனுதாரர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

சென்னை, அசோக் நகர் கதவு எண் 33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு எஸ். சங்கரநாராயணன், இயக்குநர் M/s Srinivas Waste Management Services Pvt.Ltd என்பவரின் 01.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில்11.09.2023 அன்று பெறப்பட்டு, 307/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, அசோக் நகர் கதவு எண் 33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு எஸ். சங்கரநாராயணன், இயக்குநர் M/s Srinivas Waste Management Services Pvt.Ltd என்பவர் தனது 01.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"We, Srinivas Waste Management Services (P) Ltd have participated in the SWM Tender published by Tiruchirappalli City Corporation vide Tender Notice No.10/2016-17, 11/2016-17, 12/2016-17 and 13/2016-17, E3/3865/2016 Central, E3/3865/2016 Central, H2/2205/17 Central, H2/2205/2017 Central in April 2017. We have paid an amount of Rs.4,44,000/- (Rupees Four Lakhs Forty Four Thousand only) in four demand drafts vide Nos. 506484, 506485, 506486, 506487 of Rs.1,11,000/- each towards EMD.

The tender that published was later found to be neither executed nor awarded to the participated tenderers rather awarded to Self Help Groups. Hence, we have requested the Tiruchirappalli City Corporation to refund the EMD amount since we are not awarded the tender.

We have sent many request letters to Tiruchirappalli City Corporation in many dates in spite of meeting the respected Commissioner, Tiruchirappalli City Corporation in earlier years but have not received any communication letter or the EMD refund

Hence, our humble submission to Hon'ble Sir, Tamil Nadu Local Bodies Ombudsman, to kindly intervene the situation and provide justice for our longstanding dues held with Tiruchirappalli City Municipal Corporation.

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.10.2023 நாளிட்ட அறிவிக்கை(Notice) மற்றும் 07.08.2024 நாளிட்ட கடிதம் ஆகியவற்றின் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர், தனது 13.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் M/s சீனிவாசா மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனம் அளித்துள்ள கடிதத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பான ஒப்பந்த புள்ளியில் செலுத்தப்பட்ட முன்வைப்பு தொகையினை திரும்ப வழங்கிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பான ஒப்பந்த புள்ளிகளின் பதிவேடுகள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட நிறுவனம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த புள்ளி எண் 10,11,12 மற்றும் 13 ஆகிய ஒப்பந்தப்புள்ளி பணியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஏதும் நடைபெறவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட நிறுவனம் இம்மாநகராட்சிக்கு செலுத்திய வங்கி வரைவோலை எண்கள், தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி எண்கள் ஆகியவைகள் ஆய்வு செய்யப்பட்டதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வெளிக்கொணர்வு முறையில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கு மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டுள்ளது.

இம்மாநகராட்சியில் திடக்கழிவுகளை சேகரித்தல், இனம் பிரித்தல் மற்றும் பிற கழிவுகளை எடுத்துச் செல்லுதல் ஆகிய பணியினை ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் ஈடுபட்ட மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகளின்படி செயல்படாத காரணத்தால் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் M/s சீனிவாச மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி உறையினை பிரிக்காமல் நிராகரிக்கப்பட்டு விட்டது.

...3.

M/s சீனிவாச மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனம் இம்மாநகராட்சிக்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பாக வழங்கப்பட்ட EMD தொகை திரும்ப வழங்கக்கோரி தெரிவிக்கப்பட்டுள்ளது. திடக்கழிவுகளை சேகரித்தல், இனம் பிரித்தல் மற்றும் பிற கழிவுகளை எடுத்துச் செல்லுதல் ஆகிய பணியினை ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் ஈடுபட்ட மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகளின்படி செயல்படாத காரணத்தால் மேற்கண்ட நிறுவனத்தின் கடிதம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இம்மாநகராட்சியில் டெங்கு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள தேவையான மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி எண் 10,11,12 மற்றும் 13 ஆகியவற்றில் மேற்கண்ட நிறுவனம் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகை மூன்று வருட காலம் கடந்த நிலையில் காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் இந்நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய முன்வைப்பு தொகையை, மாமன்ற ஒப்புதல் பெற்று வழங்க வேண்டி உள்ளதால் மாமன்ற ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டவுடன் M/s சீனிவாச மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் நிமிடெட், சென்னை நிறுவனத்தின் முன்வைப்பு தொகை அந்நிறுவனத்திற்கு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி சர்க்யூட் உறவுஸில் 22.08.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5 மனுதாரர் நிறுவனத்தின் HR மேலாளர் 22..08.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

எங்களது M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு ஆட்களை வழங்க கோரிய ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டு அதற்கான முன்வைப்புத் தொகையான ரூ 4,44,000/- த்தை நான்கு தவணைகளில் காசோலைகள் மூலம் வழங்கினோம். ஆனால் ஒப்பந்த புள்ளி எங்களுக்கு வழங்கப்படாத காரணத்தினால், நாங்கள் வழங்கிய ஒப்பந்த புள்ளிக்கான முன்வைப்புத் தொகையான ரூ 4,44,000/- திருப்பி அளிக்குமாறு திருச்சி மாநகராட்சியிடம் மனு அளித்தும், நேரில் சென்று முறையிட்டும் இதுவரை எங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிக்கான முன் வைப்புத்தொகை ரூ4.44,,000/- திருப்பி வழங்கப்படவில்லை.

எனவே, சுமார் 6 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள மேற்கண்ட ரூ 4,44,000/- முன்வைப்புத் தொகையை எங்களுக்கு வழங்கிட திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6. திருச்சிராப்பள்ளி மாநகர நல அலுவலர் 22.08.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

...4.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பான ஒப்பந்த புள்ளிகளின் பதிவேடுகள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட நிறுவனம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த புள்ளி எண்.10, 11, 12 மற்றும் 13 ஆகிய ஒப்பந்த புள்ளி பணியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஏதும் நடைபெறவில்லை. ஆனால், மேற்கண்ட நிறுவனம் செலுத்திய வங்கி வரைவோலை எண்கள், தொகை மற்றும் ஒப்பந்த புள்ளி எண்கள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வெளிக் கொணர்வு முறையில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கு மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டுள்ளது. இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை அடிப்படையில் செயல்படாத காரணத்தினால் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து, டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கான ஒப்பந்தப் புள்ளியில் மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை பிரிக்காமலேயே நிராகரிக்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனம் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கான மனித ஆட்களை வழங்கும் பணிக்கான ஒப்பந்த புள்ளிக்கு செலுத்திய முன்வைப்புத் தொகை மூன்று வருட காலம் கடந்த நிலையில் காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால், அத்தொகையை மாமன்ற ஒப்புதல் பெற்று வழங்க வேண்டியுள்ளதால் மாமன்ற ஒப்புதல் வைக்கப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு நிலுவையில் உள்ள முன் வைப்புத் தொகையினை வரும் 2024 செப்டம்பர் மாதம் முதல் வாரத்திற்குள் வழங்கப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறைமன்றத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் 13.08.2024 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்கு மூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் ஆணையரின் அறிக்கை, மாநகர நல அலுவலர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் சர்வீசஸ் நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு ஆட்களை வழங்க கோரிய ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டு அதற்கான முன்வைப்புத் தொகையான ரூ 4,44,000/- த்தை நான்கு தவணைகளில் காசோலைகள் மூலம் வழங்கியது. ஆனால் ஒப்பந்த புள்ளி இந்நிறுவனத்திற்கு வழங்கப்படாத காரணத்தினால், தாங்கள் வழங்கிய ஒப்பந்த புள்ளிக்கான முன்வைப்புத் தொகையான ரூ 4,44,000/- திருப்பி அளிக்குமாறு திருச்சி மாநகராட்சியிடம் மனு அளித்தும், நேரில் சென்று முறையிட்டும் இதுவரை ஒப்பந்தப்புள்ளிக்கான முன் வைப்புத்தொகை ரூ4.44,,000/- திருப்பி வழங்கப்படவில்லை. எனவே, மனுதாரர் சுமார் 6 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள முன்வைப்புத் தொகையை வழங்கிட திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உத்திரவிடமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

திருச்சி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் சர்வீசஸ் நிறுவனம் நிபந்தனை அடிப்படையில் செயல்படாத காரணத்தினால் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து, டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கான ஒப்பந்தப் புள்ளியில் மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை பிரிக்காமலேயே நிராகரிக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் செலுத்திய வங்கி வரைவோலை எண்கள், தொகை மற்றும் ஒப்பந்த புள்ளி எண்கள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வெளிக் கொணர்வு முறையில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு மனித ஆற்றல்கள் வழங்கும் பணிக்கு மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டுள்ளது என்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கான மனித ஆட்களை வழங்கும் பணிக்கான ஒப்பந்த புள்ளிக்கு செலுத்திய முன்வைப்புத் தொகை மூன்று வருட காலம் கடந்த நிலையில் காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால், அத்தொகையை மாமன்ற ஒப்புதல் பெற்று வழங்க வேண்டியுள்ளதால் மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட நிறுவனத்திற்கு நிலுவையில் உள்ள முன் வைப்புத் தொகையினை வரும் 2024 செப்டம்பர் மாதம் முதல் வாரத்திற்குள் வழங்கப்படும் என்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகரா நல அலுவலர் ஆகியோர் தங்களுடைய அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர். M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனம், டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கான மனித ஆற்றல்களை வழங்கும் பணிகள் தொடர்பாக செலுத்திய EMD தொகையான ரூ 4,44,000/–, ஒப்பந்தபுள்ளி அந்நிறுவனத்திற்கு வழங்கப்படாத நிலையில், மேற்கண்ட EMD தொகையினை திரும்ப வழங்காமல் 4 ஆண்டுகளாக மனுதாரரை அலைகழிப்பது ஏற்புடைதன்று. **இருப்பினும் திருச்சிராப்பள்ளி மாநகர நல அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனத்திற்கு செப்டம்பர் 2024 முதல் வாரத்தில் நிலுவையில் உள்ள முன்வைப்புத் தொகையை வழங்கிடுமாறும், அது குறித்த அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.** மேலும், வருங்காலங்களில் ஒப்பந்தகாரர்களின் முன்வைப்புத் தொகையை நிலுவையில்லாமல் உரிய காலத்தில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குமாறு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறதுது

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1)M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
எண் 33, 15வது அவின்யூ, அசோக் நகர்,
சென்னை 600 083

2)ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
பாரதிதாசன் சாலை, கண்டோன்மெண்ட்,
திருச்சிராப்பள்ளி 621 001

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodel Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

நகல்:
1) மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர், சென்னை 32
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).